**செய்தி வெளியீடு எண்: 395** **நாள்: 04.07.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.7.2019) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புப் படையின் பயன்பாட்டிற்காக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 137 பேரிடர் மேலாண்மை, தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்களை வழங்கிடும் அடையாளமாக காவல்துறை கூடுதல் இயக்குநர் (செயலாக்கம்) திரு.மகேஷ் குமார் அகர்வால், இ.கா.ப., அவர்களுக்கு Rotary (Circular) Rescue Saw with Diamond Tipped Blade என்ற கட்டட இடர்பாடு மீட்பு உபகரணத்தை வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

பேரிடர்களின் போது ஏற்படுகின்ற இன்னல்களை குறைக்கும் விதமாகவும், பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மிக துரிதமாக மீட்பு உதவிகளை உடனுக்குடன் கால விரயமின்றி அனுப்பிடவும், பாதிப்பிற்குள்ளான பகுதிகளையும், மக்களையும் எளிதில் சென்றடைவதற்கும், உள்ளூர் நிலப் பகுதி பற்றி நன்கு அறிந்திருக்கும் ஒரு தனி அமைப்பு தேவைப்படுகிறது. எனவே, தேசிய பேரிடர் மீட்புப் படை வழியில் ஏற்கனவே உள்ள மாநில பேரிடர் மீட்புப் படையினை (SDRF) பலப்படுத்திடவும் மற்றும் பெரும் பேரிடர்களின் போது அனைத்து விதமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், காவல் துறையில் தனியாக ஒரு பட்டாலியன் ‘‘தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை’’ (TNDRF) என்ற ஒரு புதிய பெயரில் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 11.7.2017 அன்று சட்டப்பேரவை விதி எண் 110—ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். இந்த பட்டாலியனின் செயல்பாட்டை மேம்படுத்த தகவல் தொடர்பு மற்றும் மீட்பு உபகரணங்கள் வாங்குவதற்கும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்படும் எனவும் அறிவித்தார்கள்.

அதன்படி, சென்னை, பூந்தமல்லியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல்படை 13—ஆம் அணி தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புப் படையாக மாற்றம் செய்யப்பட்டது. இப்பேரிடர் மீட்புப் படைக்கு தேவையான நவீன உபகரணங்கள், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கும், பேரிடர் மேலாண்மை பயிற்சிகளை அளிப்பதற்கும் வருவாய் மற்றும்

பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

அந்த அரசாணைக்கிணங்க, தமிழ்நாடு மாநில பேரிடர் மீட்புப் படையின் பயன்பாட்டிற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பேரிடர் மேலாண்மை, தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்களான இன்பிளாட்டபுள் பைபர் போட், புல்லட் கார்பைடு டிப்பிடு செயின் சா, டைமண்டு செயின் சா, கான்கிரீட் ஹமர் டிரில், சுவாசக் கருவி மற்றும் சிலிண்டர், மல்டி பங்சன் டவர் லைட் ஜெனரேட்டர், உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் ஜாக்கெட்டுகள், ஏர் லிப்டிங் பேக், கேஸ் கட்டர் உள்ளிட்ட 137 உபகரணங்களை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.J.K. திரிபாதி, இ.கா.ப., பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**